ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1853/18 - 2014 මාර්තු 12 වැනි බදාදා - 2014.03.12
1853/18 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழில்

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிவுகளை அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய அக்கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படு கின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**வி. பீ. பி. கே. வீரசிங்க,**
தலைவர்,
தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித்
தொழிலுக்கான கட்டுப்பாட்டுச் சபை

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2014.03.06.

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும் 2003 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதிய 1290/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான முடிவுகள் அட்டவணையின் IIஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை, பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

| | |
|---|---|
| | ரூ. ச. |
| ஒரு நாளின் நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம் | |
| வேலையாள் (ஆண்/பெண்) | 405. 00 |

03-798

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.